## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி

**அசல் வழக்கு எண்: 40 /2024 வா.சா.2**

2025ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ம் நாள் செவ்வாய்கிழமை வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்து வைக்கப்பட்டது.

**பெயர் : சின்னக்காளை தந்தை/கணவர் பெயர்: பெரியசாமி**

---

**22.04.2025 : பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. சாட்சியம் அளிப்பதற்கு வாதி என்னை அழைத்துவந்தார். தாவா சொத்தின் சர்வே எண். 90/பி ஆகும். வாதி வழக்குரை, பி.வாதி எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். தாவா சொத்துக்கான பட்டா பி.வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்குரையின் 5வது பத்தியில் செல்லக்கண்ணுவிற்கும், முத்துவிற்கும் பாகம் நடந்ததாக வழக்குரையில் சொல்லப்பட்ட சங்கதி தவறாகும். வழக்குரை தவறாக உள்ளது அதனை திருத்த வேண்டும் என்று வாதி நடவடிக்கை எடுத்தாரா என்றால் எடுப்பார். தாவா 1வது இலக்க சொத்தை நகைகளை விற்பனை செய்து வாங்கப்பட்டதாக வாதி வழக்குரையிலும், சாட்சியத்திலும் சொல்லாத நிலையில் நான் அது பற்றி சொல்ல இயலாது என்றால் சரியல்ல. பொதுவாக சீதன பணம், நகைகளை வைத்து கிரையம் பெற்றால் அந்த பெண்ணின் பெயரில் கிரையம் பெறப்படும் என்றால் சரிதான். கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. நான் 10வயது இளவர் என்பதால் மேற்படி கிரையத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. பத்திரம் ஏற்பட்ட காலத்தில் நான் 10வயது இளவர் என்பதால் வாதிகள் சொல்லிக்கொடுத்தன் அடிப்படையில் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. 1ம் பி.வாதி கணவர் சின்னக்கண்ணு 1998ம் ஆண்டிலிருந்து அவரது மனைவிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்ததாக 1998ம் ஆண்டிலிருந்து பிரச்சனை நடந்து வந்தது என்றால் சரிதான். உண்மையில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டிருந்தால் அன்றைய சமயத்திலே வழக்கு தாக்கல்செய்திருப்பார் என்றாலும் 20 வருடம் காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல. வாதியின் கைவசம் தாவா சொத்து சம்பந்தமாக என்னென்ன ஆவணங்கள் நான் பார்வையிட்டேன் என்றால் பட்டாவை பார்த்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு வரை வாதி பட்டா கேட்டு விண்ணப்பம் செய்தாரா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து பி.வாதிகளின் அனுபவத்தில் உள்ளதாக வாதி சொல்லுகிறார் என்றால் சரிதான். எனது முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றாலும் வாதி எனது சகோதரி என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கு.வி. முடிவுற்றது.